©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 19.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 235A] சென்னை, செவ்வாய்கிழமை, ஜூலை 18, 2017
ஆடி 2, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பக்கங்கள்

**பொருளடக்கம்**

**சட்டமுன்வடிவுகள் :**


| | |
|---|---|
| எண் 40/2017—தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. | 2-6 |
| எண் 41/2017—தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. | 7-12 |
| எண் 42/2017—தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. | 13-14 |
| எண் 43/2017—தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டம் .. .. .. .. .. | 15-28 |
| எண் 44/2017—தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்தும் (திருத்தம்) திருத்தச் சட்டம் .. .. .. .. .. | 29-30 |
| எண் 45/2017— தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டங்கள் (நீக்கறவு) சட்டம் .. | 31-40 |
| எண் 46/2017— தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் .. | 41-44 |
| எண் 47/2017—தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. | 45-48 |

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2017.**

## 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்

12ஆம் பிரிவிற்கான திருத்தம்.

தமிழ்நாடு சட்டம் 9/2005.

2. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

"(2) (1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக் குழு –

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும், உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வு பெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசின் முதன்மைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக் குழுவினால் நியமிக்கப்படுபவரும் சிறந்த கல்வியாளருமான ஒருவரை,

கொண்டது ஆகும்.

**விளக்கம்.**–இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது, –

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ்பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள,

நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதிலும் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2–A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக, குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர் –

(i) உயர்ந்த அளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருத்தல் வேண்டும்;

(ii) ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2-B) வேந்தரால், அரசால், ஆட்சிக் குழுவால், அந்தக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு, ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) இந்தக் குழு, தன்னுடைய பரிந்துரையை அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன கால அளவிற்குள், வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் காலஅவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கு இணங்க, மற்றொருக் குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.".

**நோக்க — காரண விவரவுரை.**

தற்போது, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 9/2005), தேர்வுக் குழு உறுப்பினர்களுக்கும் துணைவேந்தருக்கும் தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணைவேந்தரை நியமிப்பதற்கும் துணைவேந்தராக நியமனம் செய்வதற்கான தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கும் தேர்வுக் குழுவினால் வேந்தருக்கு பரிந்துரை செய்வதற்கு காலவரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பிட்ட வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 9/2005 என்ற சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே. ஏ. செங்கோட்டையன்,**
*பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும்*
*இளைஞர் நலத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய விபரக் குறிப்பு.**

இந்தச் சட்டமுன்வடிவின் 2ஆம் கூறினால் புகுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/2005) 12 ஆம் கூறின் (2-A) (ii) உட்கூறானது அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஆணை பிறப்பிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**கே. ஏ. செங்கோட்டையன்,**
*பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும்*
*இளைஞர் நலத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

2017—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2017.**

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்படும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 35/1997. 2. (இதனால் இதன்பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும்) 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் சட்டத்துக்கான நீண்டதலைப்பில் ‘‘மின்தூக்கிகள் மற்றும் அனைத்து இயந்திர அமைப்பு’’, என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘**மின்தூக்கிகள்**, இயங்கும் படிக்கட்டுகள் மற்றும் அனைத்து இயந்திரஅமைப்பு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். நீண்ட தலைப்புக்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின், 1 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், ‘‘மின்தூக்கிகள்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். 1 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின், 2 ஆம் பிரிவில்,— 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (a) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

‘‘(a)‘‘தகுதிறம் வாய்ந்த நபர்’’ என்பது, 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி முதன்மை ஆய்வாளரால் அதிகாரமளிக்கப்பெற்ற நபர் அல்லது நிறுமம் என்று பொருள்படும்;

(aa) ‘‘இயங்கும் படிக்கட்டுகள்’’ என்பது, பயணிகளை மேலே ஏற்றிச் செல்வதற்காகவோ கீழே இறக்குவதற்காகவோ பயன்படுத்தப்படும் விசையாற்றலில் இயக்கப்படும் சாய்ந்த தொடர்ச்சியான படிக்கட்டு வழி என்று பொருள்படும்;

(aaa) ‘‘அரசு’’ என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(2) (b) கூறில், ‘‘மின்தூக்கிகள் ஆய்வாளர்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் ஆய்வாளர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (h) கூறில், (iv) ஆம் உட்கூறில், ‘‘**மின்தூக்கி**’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

5. முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில், ஓரத்தலைப்பில், ‘‘**மின்தூக்கிகள் ஆய்வாளர்**’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘**மின்தூக்கிகள்** மற்றும் இயங்கும் படிக்கட்டுகள் ஆய்வாளர்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்; 3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில்,— 4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) ஓரத் தலைப்பில், ‘‘**மின்தூக்கி**’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1) ஆம் உட்பிரிவில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (2) ஆம் உட்பிரிவில்,–

(a) "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) "வகுத்துரைக்கப்படலாகும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "வகுத்துரைக்கப்படலாகும் கட்டணம்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) (a) மற்றும் (b) கூறுகளில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(d) (i) மற்றும் (j) கூறுகளுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

"(i) உத்தரங்களின் எடை மற்றும் உருவஅளவுடன் சேர்த்து மேற்புறக் கட்டமைப்பு ஏற்பாடுகள் பற்றி, வகுத்துரைக்கப்படலாகும், விவரங்கள்;

(j) இயங்கும் படிக்கட்டிற்கான சாய்வு அளவு;

(k) இயங்கும் படிக்கட்டிலுள்ள கைப்பிடிகள், கிராதிகள், நடைமிதிப்புகள், படியிடை மேடை, சீப்பு போன்ற தட்டுகள், தாங்கணைவுகள் அல்லது ஆதார உத்தரங்கள் மற்றும் படிக்கட்டு உருளைத் தடங்கள் ஆகியவற்றின் விவரங்கள்;

(l) இயங்கும் படிக்கட்டுகள் மீதான பளு மதிப்பீடு கிலோகிராமில்;

(m) மின்தூக்கியிலோ அல்லது இயங்கும் படிக்கட்டிலோ நிலையான பளுவின் அடிப்படையில் பாதுகாப்பு ஆக்கக்கூறு; மற்றும்

(n) வகுத்துரைக்கப்படலாகும் பிற விவரங்கள்;''

(4). (4) ஆம் உட்பிரிவில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

5 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (1) ஆம் உட்பிரிவில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3). (2) ஆம் உட்பிரிவில், "வகுத்துரைக்கப்படலாகும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத கட்டணம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, வகுத்துரைக்கப்படலாகும் கட்டணம்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(4). (5) ஆம் உட்பிரிவில்,–

(a) "ஓர் ஆண்டு காலஅளவு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மூன்று ஆண்டுகள் காலஅளவு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) "ஆண்டுதோறும் புதுப்பிக்கத்தக்க'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் புதுப்பிக்கத்தக்க'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

6 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவில்,–

(1) ஓரத் தலைப்பில், "மின்தூக்கிகள்'' என்ற சொற்றொடருக்குப்பதிலாக, "மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2). (2) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

''(2-A) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் (திருத்தச்) சட்டத்தின் (இதன்பின்பு இந்த உட்பிரிவில் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதி எனக் குறிப்பிடப்படும்) தொடக்கத் தேதியை ஒட்டி முன்பு, எந்த இடத்தில் இயங்கும் படிக்கட்டு நிறுவப்பட்டிருந்து இயக்கப்பட்டு வருகிறதோ அந்த இடத்தின் உரிமையாளர் ஒவ்வொருவரும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் காலஅளவு ஒன்றுக்கு அத்தகைய இயங்கும் படிக்கட்டு இயங்குவதைத் தொடரலாம் மற்றும் அத்தகைய இயங்கும் படிக்கட்டு பொறுத்து, 5 ஆம் பிரிவின்படி அவர் உரிமம் ஒன்று பெற்றாலன்றி, இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு மாதங்கள் கழிவுற்ற பின்பு அத்தகைய இயங்கும் படிக்கட்டுகள் தொடர்ந்து இயங்குதல் ஆகாது.;''

(3). (3) ஆம் உட்பிரிவில்,—

(a) ''(2) ஆம் உட்பிரிவில்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''(2) ஆம் உட்பிரிவில் அல்லது (2-A) உட்பிரிவு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) ''வகுத்துரைக்கப்படலாகும் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அத்தகைய கட்டணம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டணம்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

8 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், (iv) ஆம் கூறில், ''மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

9 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில்,—

(1) ஓரத் தலைப்பில், ''மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) ''மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

11. முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்குப் பதிலாக, பின்வரும் பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

''10. மின்தூக்கியையும் இயக்கும் படிக்கட்டையும் நிறுவுதல், பராமரித்தல், ஆய்வு செய்தல், சோதனையிடுதல் ஆகியவை தகுதிறம் வாய்ந்த நபரிடம் ஒப்படைக்கப்படுதல்,—

(1) தலைமை ஆய்வாளர், வகுத்துரைக்கப்படலாகும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், மின்தூக்கி ஒன்றை அல்லது இயங்கும்படிக்கட்டு ஒன்றை நிறுவுதல், பராமரித்தல், ஆய்வு செய்தல், சோதனையிடுதல் ஆகிய நோக்கங்களுக்கு எந்த ஒரு நபருக்கும் அல்லது நிறுமத்திற்கும் அதிகாரமளிக்கலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி அதிகாரம் அளிக்கப்படுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், வகுத்துரைக்கப்படலாகும் படிவத்தில் தலைமை ஆய்வாளருக்குச் செய்யப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் கட்டணத்துடன் சேர்ந்து போதல் வேண்டும்.

(3) நபர் எவரும், வகுத்துரைக்கப்படலாகும், தகுதிப்பாடுகளையும் பிற வேண்டுறுத்தங்களையும் நிறைவு செய்தாலன்றி, (1) ஆம் உட்பிரிவின்படி அதிகாரமளிக்கப்படுதல் ஆகாது.

விளக்கம்.— இந்தப்பிரிவின் நோக்கங்களுக்கு,—

(a) ''நிறுமம்'' என்பது, கூட்டுருமக்குழுமம் எதுவும், என்று பொருள்படும், மற்றும் அது, பதிவு செய்யப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனிநபர்களின் கழகத்தை உள்ளடக்கும்;

(b) ''தலைமை ஆய்வாளர்'' என்பது, அரசு தலைமை மின் ஆய்வாளர் என்று பொருள்படும்.

11 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

12. முதன்மைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவில்,–

(1). (1) ஆம் உட்பிரிவில்,–

(a) மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(c) "இடத்தை, மின்தூக்கி கட்டமைப்பதை அல்லது இயங்கும் படிக்கட்டு நிறுவப்படுவதை ஆய்வு செய்யும் நோக்கத்திற்கு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "இடத்தை, மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு கட்டமைப்பதை அல்லது நிறுவப்படுவதை ஆய்வு செய்யும் நோக்கத்திற்கு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, அது காணப்படும் மூன்று இடங்களிலும், ''மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (2) ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2-A) எந்த மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு பொறுத்து, (2) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட பணிப்புரை ஒன்று, நிறைவேற்றப்படவில்லையோ, அந்த மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு எதுவும், அது பயன்படுத்தப்பட்டுவருவதாகக் காணப்படும் நேர்வில், அத்தகைய மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு, உடனடியாக நிறுத்தப்படுவதற்கு ஆய்வாளரால் ஆணையிடப்பட்டு முத்திரையிடப்படுதல் வேண்டும்.'';

(4) (3) ஆம் உட்பிரிவில், "(2) ஆம் உட்பிரிவு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "(2) ஆம் உட்பிரிவு அல்லது (2-A) உட்பிரிவு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (4) ஆம் உட்பிரிவில், ''மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு '' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

13. முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில், "மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

14. முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவில்,–

(1) ''மின்தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, அது காணப்படும் மூன்று இடங்களிலும், ''மின்தூக்கி அல்லது இயங்கும் படிக்கட்டு '' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) ''மதுரை அல்லது கோயம்புத்தூர்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி அல்லது திருப்பூர்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

22 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில்,–

(1) (a), (b) மற்றும் (c) கூறுகளில், "மின்தூக்கிகள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (d) கூறில், "மின் தூக்கி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, அது காணப்படும் இரண்டு இடங்களிலும், ''மின்தூக்கி மற்றும் இயங்கும் படிக்கட்டு'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (f) கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

''(f) எந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் மற்றும் வரைத்தடைகளுக்கும் உட்பட்டு மற்றும் எந்த படிவத்திலும் மின்தூக்கி ஒன்று மற்றும் இயங்கும் படிக்கட்டு ஒன்று வேலை செய்வதற்கான உரிமம் வழங்கப்படலாமோ அந்த வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளும் மற்றும் வரைத்தடைகளும்;

(ff) 4 ஆம் பிரிவின்படி அனுமதிக்கான விண்ணப்பம் ஒன்று பொறுத்து, செலுத்தப்படவேண்டிய கட்டணங்களும் 5 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளின்படி உரிமத்திற்கான விண்ணப்பம் ஒன்று பொறுத்து, செலுத்தப்படவேண்டிய கட்டணங்களும் மற்றும் 10 ஆம் பிரிவின்படி அதிகாரமளிப்பிற்கான விண்ணப்பம் ஒன்று பொறுத்து, செலுத்தப்படவேண்டிய கட்டணங்களும்; அந்தக் கட்டணங்கள் வெவ்வேறு வகைகளிலான மின்தூக்கிகளுக்கும் இயங்கும் படிக்கட்டுகளும் வெவ்வேறாக இருக்கும், மற்றும் அத்தகைய கட்டணங்கள் செலுத்தப்படவேண்டிய முறை;

(4) (g) கூறில், ''மின்தூக்கிகள்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''மின்தூக்கிகள் மற்றும் இயங்கும் படிக்கட்டுகள்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்தூக்கிகள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 35/1997) இயங்கும்படிக்கட்டுகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் பாதுகாப்பாக இயக்குதல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்காக வழிவகை எதனையும் அடக்கியிருக்கவில்லை. எனவே, இயங்கும் படிக்கட்டுகளை நிறுவுதல், பராமரித்தல் மற்றும் பாதுகாப்பாக இயக்குதல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கும் கூட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 35/1997 என்ற சட்டத்தில் வழிவகை செய்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 35/1997 என்ற சட்டத்தைத் தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2) இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**திரு. பி. தங்கமணி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்கா வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 42/2017**

**1988–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

**இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–**

1. (1) இந்தச் சட்டம், 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்

2. இது மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 43/1998 2 (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தின் 2ஆம் பிரிவில். 2ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1)(aa) உள்நாட்டு நிறுவனம் என்றால், 2006ஆம் ஆண்டு குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் பொருள்வரையறுக்கப்பட்டு, மாநிலத்திற்குள் பொருள்களை உற்பத்தி செய்யும் அல்லது தயாரிக்கும், சேவைகளை வழங்கும் அல்லது அளிக்கும், தொழில்முனைவோர் விவரக்குறிப்பின் பகுதி II ஐ மாவட்ட தொழில் மையங்களில் பதிவு செய்துள்ள அல்லது உத்யோக் ஆதார் விவரக்குறிப்பை உத்யோக் ஆதார் வலைதளத்தில் பதிவு செய்துள்ள குறு மற்றும் சிறு நிறுவனங்கள் என்று பொருள்படும்.

(2) (d) எனும் கூறில், "ஏதேனும் ஒரு முறையில்'' என்ற சொற்றொடருக்குப் பதிவாக மின்னணு முறை உள்ளிட்ட "ஏதேனும் ஒரு முறையில்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (f) எனும் கூறில், செய்யப்படும் முறையான வழங்கு விருப்பம் "எனும் சொற்றொடருக்கு முன்பு" "மின்னணு முறை உள்ளிட்ட ஏதேனும் ஒரு முறையில்" என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்;

(4) (i) எனும் கூறில், "தாள்களின் தொகுப்பு" என்ற சொற்றொடருக்கு முன்பு மின்னணு ஆவணங்கள் "உள்ளிட்ட'' என்ற சொற்றொடாரானது புகுத்தப்படுதல் வேண்டும்,;

3. முதன்மைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவில்.– 16ஆம் பிரிவிற்கான திருத்தம்

(i) "(dd)– எனும் கூறில், அதில் உள்ள வரம்புரைகள் நீங்கலாக, பின்வரும் கூறானது பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:–

"(dd)- உள்நாட்டு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் பொருட்கள் மற்றும் வழங்கப்படும் அல்லது அளிக்கப்படும் சேவைகளைப் பொருத்தவரை மட்டும்.''

(ii)(h)-எனும் கூறுக்குப்பின்பு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுல் வேண்டும் அதாவது:–

(i) கொள்முதல் அமைப்பினால் கீழ்கண்ட படிவத்தில் சான்றிதழை பதிவு செய்வதற்குட்பட்ட தேர்வுகளை நடத்துவதற்காகத் தேவைப்படும் வினாத்தாள்களின் கொள்முதல், அதாவது:–

"கொள்முதல் செய்யப்பட்டுள்ள பொருட்கள் தேவையான தரம் மற்றும் விவரக் குறிப்புகளுடன் நம்பத்தகுந்த வழங்குனரிடமிருந்து, நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என நான் சுயமாக மனநிறைவு அடைந்துள்ளேன்.''

**நோக்க—காரண விளக்கவுரை**

1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 43/1998), அரசு கொள்முதலில் ஒளிவு மறைவின்றி செயல்படுவதற்கும் ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று ஏற்றுக்கொள்ளும் நடைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் இயற்றப்பட்டது. மேற்சொன்ன சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது கடந்த ஆண்டுகளில் ஒரு சில நடைமுறைச் சிக்கல்கள் எதிர்கொள்ளப்பட்டதுடன் ஒரு சில மேம்பாடுகளைச் செய்யவேண்டிய தேவைகளும் உணரப்பட்டன. அரசு கொள்முதலில் மேம்பட்ட திறன் மற்றும் குறைந்த செலவு போன்று பயன்களை அடைந்திட மின்னணு கொள்முதல் முறையினை மேற்சொன்ன சட்டத்தில் சேர்க்க வேண்டுயுள்ளது. மேலும், 2006ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் (மையச்சட்டம் 27/2006)—இன்படி, சிறிய அளவிலான உள்நாட்டு சிறு தொழில் நிறுவனம் என்பதன் பொருள்வரையறையை மீள வரையறுப்பதற்கான தேவை உணரப்பட்டுள்ளது. நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் பொருட்டும், அரசு கொள்முதலில் செலவினைக் குறைத்திட ஏதுவாக மின்னணு கொள்முதல் முறையினை ஒரு கொள்முதல் முறையாக சேர்ப்பதற்கும் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தை (தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிகள் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 43/1998) திறம்பட நடைமுறைப்படுத்திடவும், மேற்சொன்ன 43/1998 எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தை தக்கவாறு திருத்துவதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுக்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**டி.ஜெயக்குமார்,**
*மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்*
*நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

2017—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2017.**

**2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தை திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன் வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

**1. (1)** இந்தச்சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) 2, 3 மற்றும் 5 ஆம் பிரிவுகள் 2017 ஏப்ரல் 19 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் 4 ஆம் பிரிவு 2016 செப்டம்பர் 15 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 14/2016.**

**3 ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**2.** இதில் இதன் பின்பு முதன்மைச் சட்டம் என குறிப்பிடப்படும் 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (ச) கூறுக்கு பின்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

"(சச) வரையளவு உடல் ஊனமுற்ற நபர் என்பது அளவிடக் கூடிய வரையுரைகளில் குறித்துரைக்கப்பட்ட உடல் ஊனத்தை பொருள் வரையறை செய்யப்படாதவிடத்து நாற்பது சதவீதத்திற்கு குறையாக குறித்துரைக்கப்பட்ட உடல் ஊனத்தை உடைய நபர் என்று பொருள்படும் மற்றும் 2016 ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றோரின் உரிமைகள் சட்டத்தின் (மையச்சட்டம் 49/2016) 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி அரசால் பதவிப் பெயரிடப்பட்டுள்ள சான்றளிக்கும் அதிகார அமைப்பால் சான்றளிக்கப்பட்டவாறு அளவிடக் கூடிய வரையுரைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள உடல் ஊனத்தை பொருள் வரையறை செய்துள்ளவிடத்து உடல் ஊனமுற்ற நபரை உள்ளடக்கும்.

**27ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**3.** முதன்மைச் சட்டத்தின் 27 ஆம் பிரிவில், (ஆ) கூறுக்குப் பதிலாக, அதற்கான வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் கூறுகள் பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(ஆ) (அ) கூறில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களின் மொத்த எண்ணிக்கையிலிருந்து, நேரடி நியமனம் மூலமாக செய்யப்படும் நியமனங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ஒரு விழுக்காடும் (i), (ii) மற்றும் (iii) ஆகிய வகைகளின் கீழ் வரும் வரையளவு ஊனங்களுடன் கூடிய நபர்களுக்காகவும் மற்றும் ஒரு விழுக்காடு (iv) மற்றும் (v) வகைகளின் கீழ் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து வரையளவு ஊனங்களுடன் கூடிய நபர்களுக்காகவும், அவையாவன:—

(i) பார்வையற்ற நிலை மற்றும் குறைந்த பார்வை திறன்;

(ii) காது கேளாதோர் மற்றும் வருந்தி கேட்புத்திறன்;

(iii) மூளை சீர்குலைவு, குணப்படுத்தப்பட்ட தொழுநோய், குள்ளர், அமிலம் வீசப்பட்டு பாதிக்கப்பட்டோர் மற்றும் தசை திசு இறப்பு உள்ளடங்கலாக மூளை நரம்பு இயங்குதிறன் ஊனம்;

(iv) தற்புனைவு ஆழ்வு, அறிவுத்திறன் குறைபாடு, குறித்த சில கற்றலில் குறைபாடு மற்றும் மனவளர்ச்சி குறைபாடு;

(v) பல்வகை ஊனம், ஊனம் ஒவ்வொன்றுக்காகவும் கண்டறியப்பட்ட பதவிகளில் உள்ள காது கேளாத – பார்வையற்றோர் உள்ளடங்கலாக (i) முதல் (iv) வரையிலான இனங்களின் கீழ் வரும் நபர்களுக்கிடையேயிருந்து பல்வகை ஊனம்;

மற்றும் VI ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் சுழற்சி முறை வரிசைப்படி நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(ஆஆ) வரையளவு ஊனமுடைய நபர்களுக்கான ஒதுக்கீடு 2016 ஆம் ஆண்டு ஊனமுடைய நபர்களின் உரிமைகள் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்படி ஒவ்வொரு துறையிலும் அரசால் கண்டறியப்பட்ட பதவிகள் பொறுத்து செய்யப்படுதல் வேண்டும். **மையச் சட்டம் 49/2016.**

(ஆஆஆ) வரையளவு ஊனத்துடன் தகுந்த நபர் கிடைக்காது இருப்பதன்பொருட்டு, அல்லது பிற போதுமான காரணம் எதற்காகவும் காலியிடம் எதுவும், ஆளெடுப்பு ஆண்டு எதிலும் நிரப்பப்படாது இருக்கிறவிடத்து, அத்தகைய காலியிடம், பின்வரும் ஆளெடுப்பு ஆண்டில் முன்னோக்கி எடுத்து செல்லுதல் மற்றும் பின்வரும் ஆளெடுப்பு ஆண்டிலும் வரையளவு ஊனமுடைய தகுந்த நபர் கிடைக்காதிருப்பாரேயானால், முதலாவதாக ஐந்து இனங்களுக்கிடையேயிருந்து, ஒன்றுக்கொன்று மாற்றம் செய்வதன் மூலம் நிரப்பப்படலாம் மற்றும் அந்த ஆண்டில் அந்தப் பதவிக்காக ஊனமுற்ற நபர் எவரும் கிடைக்காதிருக்கும்போது மட்டுமே, அத்தகைய காலியிடம் ஊனமுற்று இருக்கிற நபர் அல்லாத பிற நபர் மூலம் நிரப்பப்படுதல் வேண்டும்.

**வரம்புரை:–** ஆனால், துறையிலுள்ள காலியிடங்களின் தன்மை, கொடுக்கப்பட்டுள்ள இனத்தின் நபர் பணியமர்த்தம் செய்யப்படாது இருப்பாரேயானால், அந்த காலியிடங்கள் அரசின் முன் அனுமதியுடன் ஐந்து இனங்களுக்கிடையே ஒன்றுக்கொன்று மாற்றம் செய்யப்படலாம்.'' .

**65 மற்றும் 71 ஆம் பிரிவுகளின் விடுகை.**

4. முதன்மைச் சட்டத்தின் 65 மற்றும் 71 ஆம் பிரிவுகள் விட்டு விடப்படுதல் வேண்டும்.

**VI ஆம் இணைப்புப் பட்டியலின் பதிலமைப்பு.**

5. முதன்மைச் சட்டத்தின் VI ஆம் இணைப்புப்பட்டியலுக்குப் பதிலாக பின்வரும் இணைப்புப்பட்டியல் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

## இணைப்புப்பட்டியல் – VI

**[27(ஆ) பிரிவினைப் பார்க்கவும்]**

**வரையளவு ஊனமுடைய நபர்களுக்கான ஒதுக்கீடு**

சுழற்றி முறைக்கு எதிராக குறிப்பிடப்பட்ட பின்வரும் முறைகளில் வரையளவு ஊனமுடைய நபர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும்:–

**பார்வையற்றோர் மற்றும் குறைந்த பார்வைத்திறன்**

| பொதுமுறை | | பொதுமுறை பெண்கள் | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற) பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 1 | 25 | 3 | 125 | 1 | 124 | 7 | 114 |
| 4 | 25 | 10 | 119 | 5 | 24 | 8 | 24 |
| 5 | 125 | 13 | 121 | 6 | 117 | 14 | 124 |
| 9 | 25 | 22 | 9 | 10 | 24 | 21 | 120 |
| 12 | 21 | 26 | 19 | 13 | 18 | 27 | 114 |
| 14 | 25 | 29 | 125 | 16 | 20 | 33 | 120 |
| 15 | 21 | 35 | 119 | 20 | 24 | 39 | 118 |
| 19 | 25 | 42 | 119 | 24 | 24 | 49 | 118 |
| 21 | 21 | 45 | 119 | 26 | 120 | 56 | 24 |
| 23 | 25 | 54 | 21 | 28 | 124 | 60 | 108 |
| 25 | 21 | 58 | 121 | 30 | 24 | 61 | 120 |
| 28 | 25 | 63 | 111 | 32 | 124 | 64 | 124 |
| 29 | 25 | 67 | 119 | 35 | 24 | 68 | 118 |
| 32 | 21 | 70 | 119 | 37 | 20 | 79 | 118 |
| 34 | 25 | 75 | 119 | 41 | 20 | 89 | 108 |
| 36 | 121 | 83 | 19 | 43 | 24 | 100 | 118 |
| 37 | 121 | 86 | 111 | 46 | 120 | | |
| 40 | 21 | 91 | 125 | 47 | 20 | | |
| 42 | 21 | | | 51 | 24 | | |
| 44 | 71 | | | 52 | 118 | | |
| 46 | 21 | | | 54 | 120 | | |
| 48 | 25 | | | 59 | 20 | | |
| 50 | 21 | | | 62 | 24 | | |
| 55 | 19 | | | 66 | 14 | | |
| 58 | 25 | | | 67 | 18 | | |
| 60 | 21 | | | 71 | 24 | | |
| 61 | 25 | | | 73 | 124 | | |
| 64 | 25 | | | 74 | 24 | | |
| 65 | 125 | | | 80 | 120 | | |
| 68 | 21 | | | 81 | 24 | | |
| 70 | 21 | | | 84 | 24 | | |
| 72 | 19 | | | 86 | 22 | | |
| 76 | 25 | | | 88 | 124 | | |
| 78 | 25 | | | 90 | 120 | | |
| 80 | 19 | | | 95 | 120 | | |
| 82 | 21 | | | 96 | 20 | | |
| 85 | 21 | | | 98 | 120 | | |
| 87 | 21 | | | | | | |
| 89 | 25 | | | | | | |
| 91 | 25 | | | | | | |
| 93 | 11 | | | | | | |
| 95 | 21 | | | | | | |
| 97 | 21 | | | | | | |
| 100 | 21 | | | | | | |

## பார்வையற்றோர் மற்றும் குறைந்த பார்வைத்திறன்

பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 17 | 99 |
| 38 | 15 |
| 49 | 15 |
| 77 | 15 |
| 99 | 15 |

பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் பெண்கள்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 20 | 130 |
| 92 | 15 |

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 2 | 17 |
| 8 | 137 |
| 11 | 13 |
| 12 | 117 |
| 15 | 117 |
| 18 | 17 |
| 24 | 117 |
| 27 | 17 |
| 31 | 13 |
| 33 | 17 |
| 39 | 17 |
| 41 | 117 |
| 45 | 17 |
| 48 | 117 |
| 52 | 17 |
| 57 | 17 |
| 59 | 117 |
| 63 | 17 |
| 66 | 117 |
| 69 | 17 |
| 72 | 117 |
| 76 | 117 |
| 79 | 17 |
| 82 | 117 |
| 84 | 117 |
| 88 | 17 |
| 92 | 117 |
| 94 | 17 |
| 97 | 117 |

மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பெண்கள்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 4 | 123 |
| 16 | 123 |
| 22 | 123 |
| 34 | 107 |
| 44 | 123 |
| 51 | 123 |
| 56 | 123 |
| 62 | 123 |
| 71 | 107 |
| 75 | 23 |
| 85 | 123 |
| 93 | 123 |

## பார்வையற்றோர் மற்றும் குறைந்த பார்வைத்திறன்

பட்டியலில் கண்ட சாதியினர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 2 | 122 |
| 7 | 22 |
| 11 | 122 |
| 19 | 86 |
| 23 | 122 |
| 25 | 122 |
| 30 | 112 |
| 38 | 122 |
| 43 | 122 |
| 47 | 122 |
| 50 | 112 |
| 53 | 122 |
| 57 | 122 |
| 65 | 22 |
| 73 | 22 |
| 77 | 122 |
| 81 | 122 |
| 87 | 122 |
| 90 | 16 |
| 96 | 112 |

பட்டியலில் கண்ட சாதியினர் பெண்கள்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 6 | 12 |
| 18 | 142 |
| 31 | 142 |
| 36 | 12 |
| 55 | 116 |
| 78 | 116 |
| 83 | 116 |
| 99 | 116 |

பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 3 | 2 |
| 40 | 102 |
| 53 | 2 |
| 69 | 102 |
| 74 | 102 |
| 94 | 102 |

பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர் பெண்கள்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 17 | 2 |

பட்டியலில் கண்ட பழங்குடியினர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 9 | 150 |
| 98 | 50 |

**காது கேளாதோர் மற்றும் வருந்தி கேட்பு திறன்**

| பொதுமுறை | | பொதுமுறை பெண்கள் | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற) பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 2 | 175 | 1 | 71 | 2 | 74 | 5 | 174 |
| 3 | 175 | 4 | 171 | 4 | 74 | 11 | 170 |
| 6 | 69 | 16 | 71 | 9 | 74 | 15 | 74 |
| 8 | 175 | 19 | 75 | 11 | 70 | 25 | 174 |
| 10 | 145 | 24 | 171 | 13 | 74 | 30 | 170 |
| 14 | 145 | 31 | 61 | 17 | 174 | 32 | 70 |
| 17 | 71 | 37 | 171 | 18 | 72 | 41 | 170 |
| 18 | 175 | 40 | 175 | 19 | 174 | 43 | 70 |
| 20 | 75 | 47 | 75 | 22 | 74 | 46 | 74 |
| 21 | 75 | 50 | 175 | 23 | 170 | 55 | 60 |
| 24 | 71 | 51 | 169 | 29 | 170 | 57 | 190 |
| 26 | 75 | 64 | 75 | 33 | 170 | 63 | 174 |
| 29 | 71 | 73 | 69 | 34 | 170 | 72 | 160 |
| 31 | 175 | 78 | 69 | 36 | 68 | 75 | 164 |
| 33 | 75 | 80 | 175 | 39 | 74 | 82 | 170 |
| 35 | 75 | 87 | 75 | 44 | 170 | 88 | 64 |
| 37 | 69 | 93 | 165 | 48 | 47 | | |
| 39 | 169 | 97 | 171 | 49 | 74 | | |
| 41 | 75 | 99 | 171 | 53 | 170 | | |
| 43 | 175 | | | 54 | 74 | | |
| 49 | 169 | | | 56 | 70 | | |
| 51 | 69 | | | 59 | 74 | | |
| 53 | 71 | | | 60 | 74 | | |
| 54 | 169 | | | 62 | 149 | | |
| 58 | 45 | | | 67 | 147 | | |
| 60 | 161 | | | 70 | 174 | | |
| 61 | 75 | | | 73 | 170 | | |
| 62 | 69 | | | 75 | 70 | | |
| 68 | 75 | | | 77 | 70 | | |
| 69 | 71 | | | 79 | 174 | | |
| 70 | 75 | | | 82 | 68 | | |
| 72 | 71 | | | 85 | 70 | | |
| 74 | 71 | | | 87 | 144 | | |
| 77 | 200 | | | 91 | 64 | | |
| 79 | 71 | | | 93 | 74 | | |
| 83 | 75 | | | 95 | 70 | | |
| 85 | 169 | | | 96 | 70 | | |
| 86 | 75 | | | 98 | 74 | | |
| 89 | 71 | | | | | | |
| 92 | 71 | | | | | | |
| 95 | 171 | | | | | | |
| 97 | 71 | | | | | | |
| 100 | 71 | | | | | | |

## காது கேளாதோர் மற்றும் வருந்தி கேட்பு திறன்

| பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் | | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் பெண்கள் | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 6 | 158 | 45 | 99 | 1 | 167 | 9 | 173 |
| 32 | 158 | 81 | 40 | 7 | 163 | 10 | 57 |
| 52 | 188 | | | 8 | 67 | 20 | 173 |
| 88 | 188 | | | 14 | 67 | 26 | 157 |
| | | | | 16 | 167 | 38 | 173 |
| | | | | 21 | 167 | 47 | 173 |
| | | | | 23 | 67 | 59 | 173 |
| | | | | 25 | 37 | 67 | 57 |
| | | | | 28 | 67 | 69 | 173 |
| | | | | 30 | 63 | 76 | 157 |
| | | | | 36 | 196 | 90 | 73 |
| | | | | 38 | 67 | 96 | 157 |
| | | | | 40 | 63 | | |
| | | | | 50 | 63 | | |
| | | | | 55 | 167 | | |
| | | | | 58 | 167 | | |
| | | | | 61 | 167 | | |
| | | | | 65 | 167 | | |
| | | | | 66 | 67 | | |
| | | | | 71 | 167 | | |
| | | | | 74 | 167 | | |
| | | | | 78 | 167 | | |
| | | | | 81 | 167 | | |
| | | | | 83 | 167 | | |
| | | | | 86 | 167 | | |
| | | | | 89 | 167 | | |
| | | | | 94 | 67 | | |
| | | | | 100 | 167 | | |

## காது கேளாதோர் மற்றும் வருந்தி கேட்பு திறன்

பட்டியலில் கண்ட சாதியினர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 3 | 72 |
| 5 | 72 |
| 12 | 72 |
| 15 | 172 |
| 22 | 173 |
| 27 | 72 |
| 34 | 72 |
| 35 | 172 |
| 42 | 72 |
| 45 | 172 |
| 46 | 152 |
| 56 | 172 |
| 57 | 86 |
| 63 | 72 |
| 66 | 172 |
| 68 | 156 |
| 71 | 72 |
| 76 | 72 |
| 84 | 72 |
| 91 | 172 |
| 98 | 156 |

பட்டியலில் கண்ட சாதியினர் பெண்கள்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 12 | 162 |
| 13 | 162 |
| 27 | 162 |
| 42 | 162 |
| 52 | 52 |
| 64 | 162 |
| 80 | 52 |
| 92 | 162 |
| 94 | 11 |

பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 7 | 66 |
| 28 | 166 |
| 48 | 166 |
| 90 | 132 |

பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர் பெண்கள்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 65 | 66 |
| 99 | 66 |

பட்டியலில் கண்ட பழங்குடியினர்

| சுழற்சி முறை | முறை |
|---|---|
| 44 | 50 |
| 84 | 150 |

## மூளைச்சீர்குலைவு, குணப்படுத்தப்பட்ட தொழுநோய், குள்ளர், அமிலம் வீசப்பட்டு பாதிக்கப்பட்டோர் மற்றும் தசை திசு இறப்பு உள்ளடங்கலாக மூளைநரம்பு இயங்குதிறன் ஊனம்

| பொதுமுறை | | பொதுமுறை பெண்கள் | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற) | | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லீம் அல்லாத பிற) பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சிமுறை | முறை |
| 2 | 48 | 5 | 141 | 2 | 149 | 3 | 147 |
| 5 | 48 | 11 | 148 | 4 | 149 | 12 | 47 |
| 7 | 48 | 15 | 35 | 8 | 49 | 19 | 44 |
| 9 | 121 | 20 | 109 | 12 | 149 | 24 | 147 |
| 10 | 48 | 23 | 145 | 14 | 47 | 28 | 44 |
| 13 | 141 | 30 | 141 | 15 | 144 | 35 | 149 |
| 16 | 45 | 33 | 48 | 18 | 124 | 38 | 140 |
| 18 | 41 | 43 | 145 | 21 | 49 | 52 | 34 |
| 19 | 141 | 49 | 41 | 23 | 49 | 53 | 147 |
| 21 | 148 | 55 | 141 | 27 | 147 | 66 | 149 |
| 27 | 48 | 59 | 139 | 31 | 124 | 71 | 144 |
| 28 | 148 | 60 | 45 | 34 | 47 | 77 | 128 |
| 29 | 48 | 68 | 145 | 38 | 47 | 84 | 174 |
| 30 | 48 | 74 | 41 | 40 | 49 | 91 | 134 |
| 34 | 145 | 79 | 139 | 42 | 144 | 96 | 149 |
| 36 | 45 | 84 | 29 | 45 | 147 | | |
| 39 | 48 | 90 | 175 | 46 | 44 | | |
| 41 | 45 | 95 | 141 | 47 | 147 | | |
| 44 | 135 | | | 50 | 47 | | |
| 45 | 48 | | | 57 | 174 | | |
| 47 | 48 | | | 58 | 149 | | |
| 51 | 45 | | | 64 | 38 | | |
| 52 | 148 | | | 65 | 147 | | |
| 54 | 48 | | | 69 | 149 | | |
| 56 | 148 | | | 70 | 47 | | |
| 57 | 48 | | | 72 | 49 | | |
| 62 | 45 | | | 76 | 47 | | |
| 63 | 45 | | | 78 | 149 | | |
| 65 | 41 | | | 80 | 47 | | |
| 66 | 45 | | | 83 | 44 | | |
| 71 | 41 | | | 89 | 49 | | |
| 75 | 48 | | | 92 | 149 | | |
| 76 | 148 | | | 94 | 149 | | |
| 79 | 48 | | | 97 | 49 | | |
| 81 | 69 | | | 99 | 49 | | |
| 83 | 141 | | | 100 | 49 | | |
| 85 | 48 | | | | | | |
| 88 | 45 | | | | | | |
| 90 | 41 | | | | | | |
| 92 | 48 | | | | | | |
| 94 | 48 | | | | | | |
| 96 | 41 | | | | | | |
| 98 | 25 | | | | | | |
| 100 | 148 | | | | | | |

**மூளைச்சீர்குலைவு, குணப்படுத்தப்பட்ட தொழுநோய், குள்ளர், அமிலம் வீசப்பட்டு பாதிக்கப்பட்டோர் மற்றும் தசை திசு இறப்பு உள்ளடங்கலாக மூளைநரம்பு இயங்குதிறன் ஊனம்**

| பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் | | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் பெண்கள் | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 3 | 40 | 11 | 40 | 1 | 37 | 6 | 143 |
| 24 | 40 | 59 | 40 | 4 | 37 | 14 | 173 |
| 56 | 40 | 70 | 130 | 6 | 37 | 25 | 143 |
| 67 | 40 | | | 9 | 37 | 29 | 143 |
| | | | | 17 | 37 | 36 | 143 |
| | | | | 22 | 37 | 46 | 143 |
| | | | | 26 | 37 | 48 | 57 |
| | | | | 32 | 137 | 50 | 143 |
| | | | | 35 | 37 | 73 | 43 |
| | | | | 37 | 34 | 81 | 143 |
| | | | | 42 | 37 | 87 | 157 |
| | | | | 43 | 33 | 98 | 143 |
| | | | | 51 | 137 | | |
| | | | | 53 | 33 | | |
| | | | | 55 | 37 | | |
| | | | | 61 | 37 | | |
| | | | | 63 | 137 | | |
| | | | | 64 | 137 | | |
| | | | | 68 | 33 | | |
| | | | | 75 | 133 | | |
| | | | | 77 | 37 | | |
| | | | | 80 | 133 | | |
| | | | | 87 | 37 | | |
| | | | | 88 | 137 | | |
| | | | | 91 | 37 | | |
| | | | | 93 | 33 | | |
| | | | | 95 | 37 | | |
| | | | | 99 | 137 | | |

## மூளைச்சீர்குலைவு, குணப்படுத்தப்பட்ட தொழுநோய், குள்ளர், அமிலம் வீசப்பட்டு பாதிக்கப்பட்டோர் மற்றும் தசை திசு இறப்பு உள்ளடங்கலாக மூளைநரம்பு இயங்குதிறன் ஊனம்

| பட்டியலில் கண்ட சாதியினர் | | பட்டியலில் கண்ட சாதியினர் பெண்கள் | | பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர் | | பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர் பெண்கள் | |
|---|---|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 1 | 136 | 8 | 116 | 10 | 166 | 25 | 66 |
| 7 | 136 | 16 | 142 | 31 | 31 | 82 | 132 |
| 13 | 42 | 39 | 142 | 44 | 2 | | |
| 17 | 136 | 49 | 142 | 61 | 132 | | |
| 20 | 42 | 58 | 52 | 86 | 32 | | |
| 26 | 136 | 67 | 162 | | | | |
| 33 | 126 | 69 | 26 | | | | |
| 37 | 136 | 73 | 142 | | | | |
| 40 | 136 | 85 | 142 | | | | |
| 41 | 136 | | | | | | |
| 48 | 136 | | | | | | |
| 54 | 136 | | | | | | |
| 60 | 192 | | | | | | |
| 62 | 172 | | | | | | |
| 74 | 136 | | | | | | |
| 78 | 42 | | | | | | |
| 82 | 42 | | | | | | |
| 86 | 136 | | | | | | |
| 89 | 136 | | | | | | |
| 93 | 149 | | | | | | |
| 97 | 136 | | | | | | |

| பட்டியலில் கண்ட பழங்குடியினர் | | பட்டியலில் கண்ட பழங்குடியினர் பெண்கள் | |
|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 22 | 150 | 32 | 50 |
| 72 | 150 | | |

**தற்புனைவு ஆழ்வு, அறிவுத் திறன் குறைபாடு, குறித்த சில கற்றலில் குறைபாடு மற்றும் மனவளர்ச்சி குறைபாடு / பல்வகை ஊனம்**

| பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் | | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் பெண்கள் | | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் | |
|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 14 | 78 | 34 | 188 | 3 | 96 |
| 27 | 99 | 95 | 99 | 5 | 196 |
| 42 | 99 | | | 11 | 87 |
| 63 | 78 | | | 13 | 187 |
| 75 | 78 | | | 15 | 196 |
| 84 | 78 | | | 19 | 196 |
| | | | | 23 | 187 |
| | | | | 30 | 196 |
| | | | | 31 | 87 |
| | | | | 33 | 96 |
| | | | | 35 | 196 |
| | | | | 43 | 187 |
| | | | | 45 | 196 |
| | | | | 47 | 96 |
| | | | | 49 | 196 |
| | | | | 53 | 187 |
| | | | | 56 | 87 |
| | | | | 58 | 96 |
| | | | | 68 | 187 |
| | | | | 70 | 96 |
| | | | | 73 | 187 |
| | | | | 78 | 96 |
| | | | | 85 | 96 |
| | | | | 86 | 87 |
| | | | | 90 | 196 |
| | | | | 96 | 87 |
| | | | | 98 | 187 |

## தற்புனைவு ஆழ்வு, அறிவுத் திறன் குறைபாடு, குறித்த சில கற்றலில் குறைபாடு மற்றும் மனவளர்ச்சி குறைபாடு / பல்வகை ஊனம்

| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பெண்கள் | | பட்டியலில் கண்ட சாதியினர் | | பட்டியலில் கண்ட சாதியினர் பெண்கள் | |
|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 2 | 193 | 4 | 82 | 3 | 182 |
| 18 | 193 | 9 | 86 | 23 | 92 |
| 28 | 193 | 10 | 86 | 24 | 182 |
| 40 | 193 | 18 | 86 | 33 | 182 |
| 41 | 193 | 21 | 186 | 44 | 182 |
| 54 | 93 | 28 | 86 | 61 | 182 |
| 60 | 93 | 29 | 186 | 88 | 92 |
| 65 | 193 | 32 | 192 | 97 | 182 |
| 80 | 193 | 39 | 86 | | |
| 83 | 93 | 49 | 86 | | |
| 91 | 193 | 51 | 186 | | |
| 100 | 193 | 52 | 172 | | |
| | | 59 | 186 | | |
| | | 63 | 176 | | |
| | | 67 | 186 | | |
| | | 70 | 192 | | |
| | | 72 | 192 | | |
| | | 75 | 186 | | |
| | | 79 | 186 | | |
| | | 82 | 192 | | |
| | | 89 | 186 | | |
| | | 92 | 86 | | |
| | | 95 | 186 | | |
| | | 100 | 86 | | |

| பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர் | | பட்டியலில் கண்ட சாதியினர் அருந்ததியர் பெண்கள் | | பட்டியலில் கண்ட பழங்குடியினர் | |
|---|---|---|---|---|---|
| சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை | சுழற்சி முறை | முறை |
| 19 | 102 | 57 | 132 | 60 | 150 |
| 36 | 166 | | | | |
| 77 | 166 | | | | |

**<u>நோக்க – காரண விளக்கவுரை</u>**

2016 ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றோரின் உரிமைகள் சட்டத்தின் (மையச் சட்டம் 49/2016) 34 ஆம் பிரிவு, ஊனமுற்றோருக்கு அரசு நிறுவனங்களில் நான்கு விழுக்காடு ஒதுக்கீட்டிற்கு வழி வகை செய்கிறது மற்றும் மேற்சொன்ன மையச் சட்டம் 49/2016, 2017, ஏப்ரல் 19 ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்தது. அதற்கு இணங்க ஊனமுற்றோருக்கு அரசு நிறுவனங்களில் ஒதுக்கீட்டின் விழுக்காட்டை மூன்று விழுக்காட்டிலிருந்து நான்கு விழுக்காடு என உயர்த்தி அரசாணை (நிலை) எண்.21, மாற்றுத் திறனாளிகள் நலத் (மா.தி.ந3.2) துறை, நாள் 30.05.2017 என்ற அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. எனவே, ஊனமுற்றோருக்கு நான்கு விழுக்காடு ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் வகையில் 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/2016) 27 ஆம் பிரிவிற்குத் தேவையான திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. தமிழ்நாடு சட்டம் 14/2016 என்ற சட்டத்தின் குறித்த சில வகையங்கள் தற்போது தொடர்புடையதாக இல்லாததால் அவற்றை விட்டுவிடவும் அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன் வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**D. ஜெயக்குமார்,**
*மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும்*
*நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

2017—ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2017

### 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைபடுத்தும் (திருத்தச்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு

**இந்திய குடியரசின்அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—**

1. (1) இந்தச் சட்டம், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைபடுத்தும் (திருத்தம்) திருத்தச் சட்டம் என்று அழைக்கப்படும் — குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

தமிழ்நாடு சட்டம் 18/2017 — 2. (இதற்குப்பின்பு இதில் திருத்தச் சட்டம் என குறிப்பிடப்படும்) 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைபடுத்துதல் (திருத்தச்) சட்டத்தின் 1ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:— — 1 ஆம் பிரிவிற்கான திருத்தம்

‘‘(2) இது, மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக, குறித்திடலாகும் தேதியன்று நடைமுறைக்கு வரும் மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்காக வெவ்வேறு தேதிகளை குறித்திடலாம்’’.

3. திருத்தச்சட்டத்தின் 5 ஆம் பிரிவில், (1) ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும். — 5 ஆம் பிரிவிற்கான திருத்தம்

‘‘ (1) 3ஆம் உட்பிரிவில், ‘‘மூன்று கடற்கல் தொலைதூரம்’’ என்ற சொற்றொடர் வரும் மூன்று இடங்களிலும் ‘‘ஐந்து கடற்கல் தொலைதூரம்’’ என்ற சொற்றொடர் பதிலாக அமைக்கப்படுதல் வேண்டும் ’’.

**நோக்கக் காரண விளக்கவுரை**

தமிழ்நாடு கடலோர பகுதி எங்கும் பாரம்பரிய மீன்வர்களின் நலனை பாதுகாத்தல், மீன் பிடிக்கும் படகுகள் மூலமாக மீன்பிடி தொழிலை முறைப்படுத்துதல், படகுகட்டும் நிலையங்களையும், வலை உற்பத்தி அலகுகளையும் முறைப்படுத்துதல், மீன்பிடி ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல் பொருட்டு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 8/1983) 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குமுறைப்படுத்துதல் (திருத்தச்) சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 18/2017) திருத்தம் செய்யப்பட்டு இருந்தது. பாரம்பரிய மீனவர்களிடையே கைது செய்தல் மற்றும் காணாமல் போதல் அச்சத்தை தணிக்கும் பொருட்டு, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 18/2017 என்ற சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்கு நடைமுறைக்கு வருவதற்கான வெவ்வேறு தேதிகளை குறித்திடுவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. அதன்படியே, மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 18/2017 என்ற சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்டமுன்டிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**D. ஜெயக்குமார்,**
*மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2017.**

**தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

**இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:**

**1.** இந்தச் சட்டம், 2017-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டங்கள் (நீக்கறவு) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

**2.** இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட செய்சட்டங்கள், அதன் நான்காம் பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுக்கு ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்பு சட்டங்கள் நீக்கறவு.

**3.** இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்பட்டுள்ள செய்சட்டம் எதுவும் பிற செய்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள, சேர்க்கப்பட்டுள்ள அல்லது சுட்டப்பட்டுள்ள இந்த நீக்கறவு செய்சட்டமானது பிற செய்சட்டம் எதையும் பாதித்தல் ஆகாது; காப்புரைகள்.

மற்றும் இந்தச் சட்டமானது, ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது செயலுக்கு உட்படுத்தப்பட்ட எதனின் அல்லது ஏற்கனவே பெறப்பட்ட, வந்தடைந்த, அல்லது ஏற்க நேரிட்ட உரிமை, உரிமை மூலம், கடமைப்பாடு அல்லது கடப்பாடு எதனின் அல்லது அதனைப் பொறுத்த தீருதவி அல்லது நடவடிக்கை எதனின் அல்லது உறுகடன், தண்டம், கடமைப் பொறுப்பு, கடப்பாடு, கோருரிமை அல்லது கோரிக்கை எதனின் விடுவிப்பு அல்லது தீர்த்தல் அல்லது ஏற்கனவே வழங்கப்பட்ட ஈட்டுறுதி எதனின் அல்லது கடந்தகால செயல் அல்லது செய்கை எதனின் செல்லுந்தன்மை, செல்லாத்தன்மை, விளைவு அல்லது பின்விளைவுகளை பாதித்தல் ஆகாது;

இந்தச் சட்டம், ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படும் செய்சட்டம் எதனாலும், எதிலும் அல்லது எதிலிருந்தும் எந்த முறையிலும் உறுதி செய்யப்பட்டு அல்லது ஏற்பளிக்கப்பட்டு அல்லது பெறப்பட்டு இருந்தபோதிலும், நெறி அல்லது சட்டத்தின் ஆட்சி அல்லது சட்டப்படி நிறுவப்பட்ட அதிகாரவரம்பு, வாதுரையின் படிவம் அல்லது நடப்பு முறை, தொழிலாற்றும் முறை அல்லது நடைமுறை அல்லது தற்போதுள்ள சிறப்புரிமை, கட்டுப்பாடு, விதிவிலக்கு, பதவி அல்லது நியமனம் ஆகியவை எதனையும் பாதித்தல் ஆகாது;

செய்சட்டம் எதனையும், இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதானது, தற்போது இருந்துவராத அல்லது நடைமுறையில் இல்லாத அதிகாரவரம்பு, பதவி, கடப்பாடு, உரிமை, உரிமைமூலம், சிறப்புரிமை, கட்டுப்பாடு, விதிவிலக்கு, தொழிலாற்றும் முறை, நடைமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது எதனையும் புதுப்பித்தலோ அல்லது மீட்டளித்தலோ ஆகாது;

இந்தச் சட்டத்தால் செய்சட்டங்கள் நீக்கறவு செய்யப்படுவதானது, அதிகார அமைப்பு எதனாலும் தணிக்கை செய்தல், ஆய்வு செய்தல், கணக்கு வைத்தல், புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் அல்லது அது தொடர்பாக எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்பட உள்ள பிற நடவடிக்கை எதனையும் பாதிக்கலாகாது மற்றும் அத்தகைய தணிக்கை செய்தல், ஆய்வு செய்தல், கணக்கு வைத்தல், புலனாய்வு செய்தல், விசாரணை செய்தல் அல்லது நடவடிக்கை எடுத்தல் ஆகியவை மேற்சொன்ன செய்சட்டங்கள் இந்தச் சட்டத்தினால் நீக்கறவு செய்யப்படாதவை போன்று எடுக்கப்பட்டிருக்கும் மற்றும் அல்லது தொடர்ந்து எடுக்கப்படும்.

**இணைப்புப்பட்டியல்**

**(பிரிவு 2 ஐ காண்க)**

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | **மையச்சட்டங்களின் வட்டாரப் பொருந்துகை** | |
| 1977 | 5 | 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1977 | 6 | 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1980 | 31 | 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1980 | 32 | 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1988 | 13 | 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1988 | 14 | 1988 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1988 | 39 | 1988 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1988 | 64 | 1988-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1991 | 25 | 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1991 | 26 | 1991-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| | | **தமிழ்நாடு சட்டங்கள்** | |
| 1952 | IV | 1952-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1953 | I | 1953-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1953 | XVIII | 1953-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1954 | IX | 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1954 | X | 1954-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1955 | VI | 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1955 | VII | 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1955 | XV | 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1955 | XXXVII | 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1956 | IV | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1956 | V | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1956 | XVIII | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1956 | XIX | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| 1956 | XX | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1956 | XXXVII | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1956 | XXXVIII | 1956-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1957 | IV | 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1957 | V | 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1957 | XVI | 1957-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1958 | I | 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1958 | IV | 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1958 | VI | 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1958 | IX | 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1958 | XXII | 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1958 | XXIII | 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1959 | 3 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1959 | 5 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1959 | 11 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1959 | 24 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1959 | 29 | 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1960 | 1 | 1960-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1960 | 2 | 1960-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1960 | 6 | 1960-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் ( எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1960 | 16 | 1960-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் ( எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1961 | 1 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1961 | 5 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1961 | 6 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1961 | 7 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1961 | 29 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1961 | 46 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1961 | 47 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1961 | 48 | 1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.7) சட்டம் | முழுவதும் |
| 1962 | 3 | 1962-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1963 | 1 | 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1963 | 4 | 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1963 | 5 | 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1963 | 12 | 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1963 | 24 | 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1963 | 25 | 1963-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1964 | 1 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1964 | 4 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1964 | 5 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| 1964 | 12 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1964 | 13 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1964 | 25 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.7) சட்டம் | முழுவதும் |
| 1964 | 28 | 1964-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1965 | 2 | 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1965 | 5 | 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1965 | 6 | 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1965 | 14 | 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1965 | 24 | 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1965 | 25 | 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1966 | 5 | 1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1966 | 6 | 1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1966 | 10 | 1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1966 | 15 | 1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1966 | 16 | 1966-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1967 | 1 | 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1967 | 2 | 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1967 | 8 | 1967-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1968 | 1 | 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1968 | 4 | 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1968 | 5 | 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1968 | 9 | 1968-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1969 | 4 | 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1969 | 5 | 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1969 | 6 | 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1969 | 7 | 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1969 | 12 | 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1969 | 13 | 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1970 | 1 | 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1970 | 5 | 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1970 | 6 | 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1970 | 8 | 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1970 | 21 | 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1970 | 22 | 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1971 | 5 | 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கப்பளிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1971 | 6 | 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1971 | 14 | 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1971 | 42 | 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1971 | 43 | 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| 1972 | 6 | 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1972 | 7 | 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1972 | 23 | 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1973 | 1 | 1972-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1973 | 13 | 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1973 | 14 | 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1973 | 35 | 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1973 | 36 | 1973-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1974 | 12 | 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1974 | 14 | 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1974 | 18 | 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1974 | 33 | 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1974 | 51 | 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1975 | 8 | 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1975 | 9 | 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1975 | 12 | 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1975 | 42 | 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1975 | 43 | 1975-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1977 | 5 | 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1978 | 4 | 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1978 | 18 | 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1978 | 19 | 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1978 | 20 | 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1978 | 35 | 1978-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1979 | 16 | 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1979 | 17 | 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1979 | 18 | 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1979 | 25 | 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1979 | 26 | 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1979 | 27 | 1979-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1979 | 46 | 1979- ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1980 | 20 | 1980 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1981 | 1 | 1981 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1981 | 21 | 1981 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1981 | 22 | 1981 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1981 | 29 | 1981 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1981 | 57 | 1981 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண் 4) சட்டம் | முழுவதும் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| 1982 | 19 | 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1982 | 20 | 1982 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1982 | 52 | 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1983 | 15 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1983 | 16 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1983 | 17 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1983 | 18 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1983 | 35 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1983 | 36 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1983 | 37 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1983 | 38 | 1983 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.7) சட்டம் | முழுவதும் |
| 1984 | 20 | 1984 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1984 | 21 | 1984–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும். |
| 1984 | 24 | 1984 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1984 | 33 | 1984 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1984 | 34 | 1984 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1985 | 2 | 1985 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1985 | 3 | 1985 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1985 | 33 | 1985 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1986 | 12 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1986 | 13 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1986 | 23 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1986 | 24 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1986 | 30 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1986 | 70 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1986 | 71 | 1986 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.6) சட்டம் | முழுவதும் |
| 1987 | 7 | 1987 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1987 | 8 | 1987 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1987 | 12 | 1987 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1987 | 41 | 1987 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1987 | 42 | 1987 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1987 | 43 | 1987 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1989 | 6 | 1989 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1989 | 7 | 1989 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1989 | 10 | 1989 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1990 | 6 | 1990 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| 1990 | 9 | 1990 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1990 | 11 | 1990 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1990 | 16 | 1990 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1990 | 36 | 1990 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1991 | 7 | 1991 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1991 | 29 | 1991 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1991 | 38 | 1991 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1992 | 12 | 1992 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1992 | 13 | 1992 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1992 | 18 | 1992 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1992 | 22 | 1992 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1992 | 23 | 1992 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1992 | 53 | 1992 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1993 | 6 | 1993 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1993 | 7 | 1993 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1993 | 11 | 1993 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1993 | 30 | 1993 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1994 | 18 | 1994 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1994 | 19 | 1994 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1994 | 22 | 1994 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1994 | 24 | 1994 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1994 | 58 | 1994 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1995 | 2 | 1995 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1995 | 3 | 1995 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1995 | 9 | 1995 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1995 | 35 | 1995 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1996 | 5 | 1996 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1996 | 6 | 1996 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1996 | 25 | 1996 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1996 | 29 | 1996 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1997 | 17 | 1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1997 | 18 | 1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1997 | 22 | 1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1997 | 41 | 1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1997 | 42 | 1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | சட்டநீக்கத்தின் அளவு |
|---|---|---|---|
| 1997 | 50 | 1997 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.5) சட்டம் | முழுவதும் |
| 1998 | 6 | 1998 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1998 | 7 | 1998 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1998 | 13 | 1998 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1998 | 14 | 1998 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 1998 | 39 | 1998 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |
| 1999 | 5 | 1999 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 1999 | 6 | 1999 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 1999 | 8 | 1999 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 1999 | 40 | 1999 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 2000 | 3 | 2000 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் | முழுவதும் |
| 2000 | 4 | 2000 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் | முழுவதும் |
| 2000 | 8 | 2000 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.2) சட்டம் | முழுவதும் |
| 2000 | 9 | 2000 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.3) சட்டம் | முழுவதும் |
| 2000 | 29 | 2000 -ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண்.4) சட்டம் | முழுவதும் |

<u>நோக்கக்காரண விளக்கவுரை.</u>

சட்டநூலில் இருந்து வரும் மிகவும் பழமையான மற்றும் பயனற்றுப் போன சட்டங்களை (மையச்சட்டங்கள்) நீக்கறவு செய்வதற்கு மைய அரசு பொறுப்புடையதாய் இருக்கிறது. பயனற்றுப்போன அல்லது அவற்றின் செறிவு இழந்த சட்டங்களை நீக்கறவு செய்வதன் தேவையை கருத்தில் கொண்டு "உடனடியாக நீக்கறவு செய்யத் தேவைப்படும் மிகவும் பழமையான சட்டங்கள்" என்பதன் மீது இந்திய சட்ட ஆணையம் அதன் 248 ஆவது, 249 ஆவது, 250 ஆவது மற்றும் 251 ஆவது அறிக்கைகளில் மற்றவற்றிற்கிடையே, 289 செய்சட்டங்களை நீக்கறவு செய்வதற்காக பரிந்துரை செய்துள்ளது.

2. பிரதமமந்திரி அலுவலகத்தில் அமைக்கப்பட்ட இராமனுஜம் குழுவானது 1741 செய்சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு பரிந்துரை செய்திருக்கிறது. இதனுடன் சேர்த்து 1977 முதற்கொண்டு குடியரசுத்தலைவர் ஆட்சியின் போது, நாடாளுமன்றத்தினால் இயற்றப்பட்ட 144 மாநில நிதி ஒதுக்களிப்புச் சட்டங்கள் அரசமைப்பின் 357 (2) உறுப்பின்படி அந்த அந்த மாநில சட்டமன்றப் பேரவையினால் நீக்கறவு செய்யப்பட உள்ளன. 357 (2) ஆம் உறுப்பானது பின்வருமாறு உள்ளது:—

"357 (2) நாடாளுமன்றத்திற்கு அல்லது குடியரசுத் தலைவருக்கு அல்லது (1) ஆம் கூறின் (அ) உட்கூறில் சுட்டப்பட்ட பிற அதிகாரஅமைப்பிற்கு 356 ஆம் உறுப்பின்படி பிறப்பிக்கப்பட்ட சாற்றாணையின் வழி மாநிலச் சட்டமன்றத்தின் சட்டமியற்று அதிகாரம் அளிக்கப்பட்டு, அதன்படி நாடாளுமன்றம் அல்லது குடியரசுத்தலைவர் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும் சட்டம் இயற்றியிருப்பின், அச்சட்டமானது அச்சாற்றிணை செயற்பாட்டிலிருப்பது அற்றுப்போனதன் பின்பும் ஒரு தகுதிறமுள்ள சட்டமன்றத்தினால் அல்லது பிற அதிகாரஅமைப்பினால் மாற்றமோ நீக்கறவோ திருத்தமோ செய்யப்படும் வரையில் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வரும்."

3. அரசமைப்பின் 357 (2) ஆம் உறுப்பின்படி, தமிழ்நாடு அரசின் தொடர்புடைய பின்வரும் நிதிஒதுக்களிப்புச் சட்டங்களை நீக்கறவு செய்யப்பட உள்ளன:—

1. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் (மையச்சட்டம் 5/1977).
2. 1977-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் (மையச்சட்டம் 6/1977).
3. 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் (மையச்சட்டம் 31/1980).
4. 1980-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் (மையச்சட்டம் 32/1980)
5. 1988—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் (மையச்சட்டம் 13/1988).
6. 1988—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் (மையச்சட்டம் 14/1988).
7. 1988—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண். 2) சட்டம் (மையச்சட்டம் 39/1988).
8. 1988—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (எண். 3) சட்டம் (மையச்சட்டம் 64/1988).
9. 1991—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டம் (மையச்சட்டம் 25/1991).
10. 1991—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டம் (மையச்சட்டம் 26/1991).

இந்த நிதி ஒதுக்களிப்புச் சட்டங்கள் தொடர்பற்றதாக உள்ளது அல்லது செயல்படாமல் உள்ளது மற்றும் முக்கியமாக அவைகளுடைய நோக்கத்தை நிறைவேற்றிவிட்டது மற்றும் அவைகளுடைய பயன்பாட்டினை துய்த்துவிட்டது.

4. தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கும் கூட அரசு முடிவு செய்திருக்கிறது. அது 1952 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையிலான காலத்தின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட இருநூற்று பதினான்கு தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டங்களை உள்ளடக்கும். நிதி ஒதுக்களிப்புச் சட்டங்கள் குறிப்பிட்ட

நிதியாண்டு ஒன்றுக்குப்பின்பு பயனற்று இருப்பதால், கடந்தகால நடவடிக்கைகளை காக்கும் பொருட்டு சட்டமுன்வடிவில் காப்புரை புகுத்தப்பட்டு உள்ளது. அவ்வாறு இயற்றப்படுவதன்பேரில் அது, மிகவும் பழமையான சட்டங்களைக் குறைத்து எவற்றின் நலப்பயனாக சட்டங்கள் இயற்றப்படுகின்றனவோ அவற்றிற்கு தெளிவு கொடுக்கும். எனவே, 1952 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டுவரையிலான காலத்தின் போது மாநில சட்ட மன்றத்தால் இயற்றப்பட்ட தமிழ்நாடு நிதி ஒதுக்களிப்புச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

5. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி. வி. சண்முகம்,**
சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்
சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2017.**

**1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக: –

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச்சட்டம் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 8/1971.

11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகச் சட்டத்தின்

11ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

“(2) (1)ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றம் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளர் ஒருவரை,

(ii) மேலாண்மைக் குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை; கல்வி அலுவல் குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை கொண்டதாகும்.

விளக்கம்.– இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக “சிறந்த கல்வியாளர்” என்பது, –

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட வேளாண் பல்கலைக்கழகம் எதனின் துணை வேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள, அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ்பெற்ற கல்வியாளராக இருக்கிற, அல்லது

(iii) இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேளாண் ஆராய்ச்சி நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள

நபர் என்று பொருள்படும்:

வரம்புரை: ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில்எதனின்உறுப்பினராகஇருத்தல்ஆகாது அல்லதுபல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்,–

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், கல்வி அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித் தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், மேலாண்மைக் குழுவால் மற்றும் கல்வி அலுவல் குழுவால், குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு நான்கு மாதங்களுக்கு முன்பு முடிக்கப்படுதல் வேண்டும்.

(2-C) துணை வேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, தன்னுடைய பரிந்துரையை அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் வழங்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.

**நோக்க – காரண விளக்க உரை**

தற்போது, 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 8/1971) தேர்வு குழு உறுப்பினர்களுக்கும் துணை வேந்தருக்கும் தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணை வேந்தரை நியமிப்பதற்காகவும், துணை வேந்தராக நியமனம் செய்வதற்குப் பொருத்தமான நபர்களின் தேர்ந்த பெயர்பட்டியலை தயாரிப்பதற்காகவும் தேர்வு குழுவினால் வேந்தருக்கு பரிந்துரை செய்வதற்கு கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பான வகைமுறைகளைச் செய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 8/1971 என்ற சட்டத்தை தகுந்த முறையில் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இரா. துரைக்கண்ணு,**
*வேளாண்மைத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய விவரக் குறிப்பு**

இந்தச் சட்ட முன்வடிவில் 2ஆம் கூறினால் புகுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 11ஆம் பிரிவின் (2-B) (ii) உட்கூறானது அதனில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஆணை பிறப்பிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி, தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**இரா. துரைக்கண்ணு,**
*வேளாண்மைத்துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

2017—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 18—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2017.**

**1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2017ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என்று அழைக்கப் பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 42/1989)

11ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் 11ஆம் பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக, அதன் வரம்புரை உள்ளடங்கலாக, பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

" (2). (1)ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக் குழு,—

(i) வேந்தரால் நியமிக்கப்படுபவரும், உச்ச நீதிமன்றத்தின் அல்லது உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை,

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும், அரசு முதன்மை செயலாளர் படி நிலைக்குக் குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை,

(iii) கல்வி அலுவல் குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரை

கொண்டது ஆகும்.

விளக்கம். — இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, "சிறந்த கல்வியாளர்" என்பது, —

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணை வேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள, அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லது இரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் அனுபவம் பெற்றுள்ள புகழ்பெற்ற கல்வியாளராக இருக்கிற, அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள

நபர் என்று பொருள்படும்:

வரம்புரை : ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக் கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும்

தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(2-A) துணை வேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர் —

i. உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், மற்றும் கல்வி அமைப்பு மூலமாக பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

ii. தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித் தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(2-B) வேந்தரால், அரசால் மற்றும் கல்வி அலுவல் குழுவால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணை வேந்தரின் பதவியில் காலியிடம் நியா-யமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு ஆறு மாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(2-C) துணை வேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணை வேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக் கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(2-D) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். அந்தக்குழு மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர், அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலுமான கால அவகாசம் வழங்கலாம் அல்லது **(2)**ஆம் உட்பிரிவிற்கிணங்க மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்.''.

**நோக்க – காரண விளக்கவுரை**

தற்போது, 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தால் (தமிழ்நாடு சட்டம் 42/1989) தேர்வுக் குழு உறுப்பினர்களுக்கும், துணை வேந்தருக்கும் தகுதி எதுவும் வகுத்துரைக்கப்படவில்லை. மேலும், துணை வேந்தரை நியமிப்பதற்காகவும், துணை வேந்தராக நியமனம் செய்வதற்கான தகுதியுள்ள நபர்களின் தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலை தயாரிப்பதற்காகவும் தேர்வுக் குழுவினால் வேந்தருக்கு பரிந்துரை செய்வதற்கும் கால வரம்பு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக குறிப்பிட்ட வகை முறைகளை செய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 42 /1989 என்ற சட்டத்தை திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பா. பாலகிருஷ்ணா ரெட்டி,**
*கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**சட்டமியற்ற அதிகார ஒப்படைவு பற்றிய விவர குறிப்பு**

இந்தச் சட்ட முன்வடிவின் 2 ஆம் கூறினால் புகுத்தப்பட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 11 ஆம் பிரிவின் (2-A) (ii) ஆம் உட்பிரிவானது அதனில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு ஆணை ஒன்றை பிறப்பிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவே அன்றி தனித் தன்மை வாய்தலை அல்ல.

**பா. பாலகிருஷ்ணா ரெட்டி,**
*கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.